# ஸ்ரீ மூகாம்பிகையம்மன் கோயிலில் பௌர்ணமி சிறப்பு பூஜை

**செங்கம், ஜூன் 15:** செங்கம் ஸ்ரீ மூகாம்பிகையம்மன் கோயிலில் செவ்வாய்க்கிழமை இரவு பௌர்ணமி சிறப்பு பூஜைகள் நடைபெற்றன.



பௌர்ணமி பூஜைகளுக்குப் பிறகு சிறப்பு அலங்காரத்தில் பக்தர்களுக்கு அருள்பாலித்த மூகாம்பிகையம்மன்.

திருவண்ணாமலை மாவட்டம், செங்கம் தளவாநாய்க்கன் பேட்டை பகுதி செய்யாற்றின் கரையோரம் ஸ்ரீ மூகாம்பிகையம்மன் கோயில் அமைந்துள்ளது.

இந்தக் கோயிலில் பௌர்ணமி நாள்களில் சிறப்பு பூஜைகள் நடத்தப்படுவது வழக்கம். அதன்படி, கோயிலில் செவ்வாய்க்கிழமை பௌர்ணமி சிறப்பு வழிபாடு நடைபெற்றது. அன்று காலை முதல் சுவாமிக்கு சிறப்பு பூஜைகள் நடைபெற்று, மாலையில் சிறப்பு அபிஷேகம், ஆராதனை நடத்தப்பட்டு தீபாராதனை காண்பிக்கப்பட்டது.

இதில், ஆத்மானந்த செந்தில் சுவாமிகள் கலந்து கொண்டு சுவாமிக்கு படையலிட்ட வளையல், குங்குமம் போன்றவைகள் பக்தர்களுக்கு வழங்கி ஆசீர்வதித்தார். மேலும், திருமண வரம் வேண்டியும், குழந்தைப் பாக்கியம் வேண்டியும் பக்தர்கள் சுவாமியை தரிசித்தனர்.

இதைத் தொடர்ந்து, கோயில் வளாகத்தில் பக்தர்களுக்கு அன்னதானம் நடைபெற்றது. அன்னதானத்தை ஆத்மானந்தா செந்தில்சுவாமிகள் தொடக்கிவைத்தார்.

# புதுச்சேரியில் ஜூன் 19-இல் திருப்பதி ஸ்ரீநிவாச திருக்கல்யாண உற்சவம்

**புதுச்சேரி, ஜூன் 15:** புதுச்சேரியில் வருகிற 19-ஆம் தேதி திருப்பதி ஸ்ரீநிவாச திருக்கல்யாண உற்சவம் நடைபெறுகிறது.

இதுகுறித்து புதுவை மாநில அமைச்சரும், திருக்கல்யாண சேவா அறக்கட்டளைத் தலைவருமான க.லட்சுமிநாராயணன் புதன்கிழமை செய்தியாளர்களிடம் கூறியதாவது:

திருமலை திருப்பதி தேவஸ்தான கல்யாண உற்சவத் திட்டம், புதுவை ஸ்ரீவாரி திருக்கல்யாண சேவா அறக்கட்டளை இணைந்து புதுச்சேரியில் வருகிற ஞாயிற்றுக்கிழமை (ஜூன் 19) லாஸ்பேட்டை விமானதள மைதானத்தில் ஸ்ரீவாரி சீனிவாச திருக்கல்யாண உற்சவத்தை நடத்துகின்றன. கரோனா பரவல் காரணமாக, புதுச்சேரியில் கடந்த 2016-ஆம் ஆண்டுக்குப் பிறகு மீண்டும் இப்போது திருக்கல்யாண உற்சவம் நடைபெறவுள்ளது. இந்த முறை திருமலையிலிருந்து கல்யாண உற்சவர் கொண்டுவரப்பட்டு, திருமலையின் பிரதான அர்ச்சகர்கள் கலந்து கொண்டு சுவாமி திருக்கல்யாணத்தை நடத்தி வைக்கின்றனர்.

இந்த உற்சவத்துக்காக புதுச்சேரி புதிய பேருந்து நிலையத்திலிருந்து இலவசமாக பேருந்து வசதியும் செய்து தரப்படுகிறது என்றார். எஸ்.செல்வகணபதி எம்.பி., எம்.பாபுஜி, என்.நவீன்பாலாஜி உள்ளிட்ட அறக்கட்டளை நிர்வாகிகள் உடனிருந்தனர்.

# கொடுஞ்செயல் எதிர்ப்பு உறுதிமொழி ஏற்பு



சிதம்பரம் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் பதிவாளர் கே.சீத்தாராமன் முன்னிலையில் உறுதிமொழி ஏற்ற பேராசிரியர்கள், ஊழியர்கள்.

**சிதம்பரம், ஜூன் 15:** முதியோர்களுக்கு எதிரான கொடுஞ்செயல் எதிர்ப்பு உறுதிமொழி ஏற்பு நிகழ்ச்சி சிதம்பரம் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் புதன்கிழமை நடைபெற்றது.

பல்கலைக்கழக சீனிவாச சாஸ்திரி அரங்கில் நடைபெற்ற இந்த நிகழ்ச்சியில், பதிவாளர் கே.சீத்தாராமன் உறுதிமொழியை வாசிக்க தேர்வுக் கட்டுப்பாட்டு அதிகாரி மு.பிரகாஷ், தொலைதூரக் கல்வி இயக்கக இயக்குநர் சிங்காரவேலன், மக்கள்-தொடர்பு அலுவலர் ஜி.ரத்தினசம்பத் மற்றும் புல முதல்வர்கள், துறைத் தலைவர்கள், பேராசிரியர்கள், ஊழியர்கள் கலந்துகொண்டு, முதியோர்களுக்கு எதிரான கொடுஞ்செயல் எதிர்ப்பு உறுதிமொழியை ஏற்றுக் கொண்டனர்.

முடிந்தது தடைக் காலம்

# உற்சாகத்துடன் மீன் பிடிக்கச் சென்ற புதுச்சேரி, காரைக்கால் மீனவர்கள்

**புதுச்சேரி, ஜூன் 15:** மீன் பிடித் தடைக்காலம் முடிவடைந்ததைத் தொடர்ந்து, புதுச்சேரி, காரைக்கால் பகுதிகளைச் சேர்ந்த மீனவர்கள் புதன்கிழமை படகுகளில் உற்சாகத்துடன் மீன் பிடிக்க ஆழ் கடலுக்குள் சென்றனர்.

கடலில் மீன் வளத்தை பாதுகாக்கும் வகையில், ஆண்டுதோறும் மீன் பிடித் தடைக்காலம் அமல்படுத்தப்பட்டு வருகிறது. அதன்படி, புதுவை அரசின் மீன் வளத் துறை சார்பில், நிகழாண்டுக்கான மீன் பிடித் தடைக்காலம் கடந்த ஏப்ரல் 15-ஆம் தேதி முதல் ஜூன் 14-ஆம் தேதி நள்ளிரவு வரை 61 நாள்களுக்கு அமல்படுத்தப்பட்டது.

இதையொட்டி, புதுச்சேரி, காரைக்காலில் இருந்து 2,348 படகுகளில் கடலுக்குச் செல்லும் சுமார் 10 ஆயிரம் மீனவர்கள் மீன் பிடிக்கச் செல்லவில்லை. இந்தக் காலங்களில் மீனவர்கள் தங்களது வலைகள், படகுகளை சீரமைக்கும் பணிகளில் ஈடுபட்டனர்.

தடைக்காலம் ஜூன் 14-ஆம் தேதி நள்ளிரவுடன் முடிவடைந்ததால், புதன்கிழமை அதிகாலை முதலே புதுச்சேரி, காரைக்கால் பகுதிகளில் உள்ள 25 மீனவ கிராமங்களைச் சேர்ந்த மீனவர்கள், தேங்காய்த்திட்டு, காரைக்கால் துறைமுகங்களில் இருந்து தங்களது விசைப்படகு, பைபர் படகுகளில் உற்சாகத்துடன் கடலுக்குள் மீன் பிடிக்கச் சென்றனர்.



புதுச்சேரியில் மீன் பிடித் தடைக்காலம் முடிவடைந்ததையொட்டி, தேங்காய்த்திட்டு மீன் பிடி துறைமுகப் பகுதியில் படகுக்கு பூஜை செய்து மீன் பிடிக்கச் சென்ற மீனவர்கள்.

முன்னதாக அவர்கள், படகுகளில் வலைகள் உள்ளிட்ட மீன் பிடி உபகரணங்கள், ஐஸ் கட்டிகளை நிரப்பிவிட்டு, பூஜை செய்த பிறகு கடலுக்குள் சென்றனர்.

2 மாதங்களுக்குப் பிறகு சுமார் 5 ஆயிரத்துக்கும் மேற்பட்ட மீனவர்கள் 1,500 படகுகளில் மீன் பிடிக்க கடலுக்குள் சென்றுள்ளனர் என்று மீன் வளத் துறை அதிகாரிகள் தெரிவித்தனர்.

இதனால், மீன் வரத்து அதிகரித்து, உயர்ந்துள்ள மீன்களின் விலை குறையும் என பொதுமக்கள் எதிர்பார்க்கின்றனர்.

# ஆற்றில் கண்டறியப்பட்ட பழைமையான பானை!

**நெய்வேலி, ஜூன் 15:** கடலூர் மாவட்டம், பண்ருட்டி அருகே எனதிரிமங்கலம் தென்பெண்ணை ஆற்றில் நடத்தப்பட்ட கள ஆய்வில் மிகவும் பழைமையான கெண்டி மூக்கு பானை கண்டறியப்பட்டது.



எனதிரிமங்கலம் தென்பெண்ணை ஆற்றில் கண்டறியப்பட்ட கெண்டி மூக்கு பானை.

தொல்லியல் ஆய்வாளர் இம்மானுவேல், வரலாற்று ஆர்வலர் மோகன கண்ணன் ஆகியோர் இந்தப் பகுதிகளில் களஆய்வு மேற்கொண்டு வருகின்றனர். இதுகுறித்து இம்மானுவேல் கூறியதாவது:

பண்ருட்டி தென்பெண்ணையாற்றில் கடந்த சில மாதங்களாக நடத்திய மேற்புற கள ஆய்வில் சங்க கால மக்கள் இந்தப் பகுதியில் வாழ்ந்ததற்கான தொல்லியல் தடயங்கள் கிடைத்தன. எனதிரிமங்கலம் பகுதியில் கள ஆய்வு மேற்கொண்டபோது சங்க கால மக்கள் குடிநீர் பருக பயன்படுத்திய கெண்டி மூக்கு பானை, கெண்டி மூக்கு பகுதிகள் கண்டறியப்பட்டுள்ளன. இதுபோன்ற பானைகள் தமிழகத்தில் கீழடி, கொற்கை, உறையூர் போன்ற பகுதிகளில் கிடைத்துள்ளன. இதன்மூலம், பண்ருட்டி பகுதியில் சங்க கால மக்கள் வாழ்ந்ததை அறிய முடிகிறது என்றார் அவர்.

# குரூப்-4 தேர்வுக்கான இலவசப் பயிற்சி வகுப்பு

**திருவண்ணாமலை, ஜூன் 15:** திருவண்ணாமலையில் நடைபெறும் குரூப்-4 தேர்வுக்கான இலவசப் பயிற்சி வகுப்பில் பங்கேற்க தேர்வர்களுக்கு மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகம் அழைப்பு விடுத்தது.

தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம், குரூப்-4 காலிப் பணியிடங்களை நிரப்புவதற்கான எழுத்துத் தேர்வை ஜூலை 24-ஆம் தேதி நடத்துகிறது. இந்தத் தேர்வுக்கு திருவண்ணாமலை மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மையத்தில் நேரடி இலவசப் பயிற்சி வகுப்புகள் திங்கள் முதல் வெள்ளிக்கிழமை வரை நடைபெற்று வருகிறது.

இந்தப் பயிற்சி வகுப்பில் இதுவரை 62 பேர் சேர்ந்து படித்து வருகின்றனர். திருவண்ணாமலை மாவட்டத்தைச் சேர்ந்த குரூப்-4 தேர்வுக்கு விண்ணப்பித்துள்ள இளைஞர்கள் இந்தப் பயிற்சி வகுப்பில் பங்கேற்று பயனடையலாம் என்று மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலர் லோ.யோகலட்சுமி தெரிவித்துள்ளார்.

# அரசுப் பள்ளியில் எம்எல்ஏ ஆய்வு



கீழ்ப்பெரும்பாக்கம் அரசு மேல்நிலைப் பள்ளியில் மாணவ, மாணவிகளுக்கு பாடப் புத்தகங்களை வழங்கிய இரா.லட்சுமணன் எம்எல்ஏ.

**விழுப்புரம், ஜூன் 15:** விழுப்புரம் கீழ்ப்பெரும்பாக்கம் அரசு மகளிர் மேல்நிலைப் பள்ளியில் விழுப்புரம் தொகுதி சட்டப் பேரவை உறுப்பினர் இரா.லட்சுமணன் புதன்கிழமை ஆய்வு செய்தார்.

அப்போது, பள்ளியில் போதிய கட்டட வசதி, அடிப்படை வசதிகள் உள்ளனவா? என ஆசிரியர்களிடம் கேட்டறிந்தார்.

பள்ளிக்கு கூடுதல் கட்டட வசதி குறித்து எம்எல்ஏவிடம் பள்ளித் தலைமை ஆசிரியர் யமுனாபாய் தலைமையிலான ஆசிரியர்கள் கோரிக்கை வைத்தனர்.

அதை ஏற்று, தனது தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து விரைவில் நிதி ஒதுக்குவதாக எம்எல்ஏ லட்சுமணன் உறுதி அளித்தார்.

பின்னர் பள்ளி மாணவ, மாணவிகளுக்கு புதிய பாடப் புத்தகங்களை வழங்கினார்.

நிகழ்ச்சியில், மாவட்டக் கல்வி அலுவலர் (பொ) காளிதாஸ், பெற்றோர் ஆசிரியர் கழகத் தலைவர் மு.இளங்கோவன், விழுப்புரம் நகர திமுக செயலர் இரா.சக்கரை, கோலியனூர் ஒன்றியக்குழுத் தலைவர் சச்சிதானந்தம், நகர்மன்ற உறுப்பினர்கள் மணவாளன், மகாலட்சுமி வைத்தியநாதன் உள்பட பலர் பங்கேற்றனர்.


ICICI Home Finance

**நிறுவன அலுவலகம்:** ICICI ஹோம் பைனான்ஸ் கம்பெனி லிமிடெட், ICICI HFC டவர், அந்தேரி குர்லா சாலை, அந்தேரி (கிழக்கு), மும்பை - 400059, இந்தியா.
**கிளை அலுவலகம்:** ICICI ஹோம் பைனான்ஸ் கம்பெனி லிமிடெட், 2ஆவது தளம், சொர்ணாம்பிகை வளாகம், ஓமலூர் பிரதான சாலை, சேலம் - 636009.

[பார்க்க விதி 8(6)-இன் விதிமுறைகள்]

**அசையாச் சொத்துக்களின் விற்பனை அறிவிப்பு**

கடனீட்டுச் சொத்துக்களை ரொக்கமாக்குதல் மற்றும் சீரமைத்தல் மற்றும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்கச் சட்டம் 2002 அதனுடன் கடனீட்டுச் சொத்து (அமலாக்கம்) விதிகள் 2002, விதி 8(6)-இன் விதிமுறைகள் கீழான அசையாச் சொத்துக்களின் E-ஏல விற்பனை அறிவிப்பு

இதன் மூலம் பொதுமக்களுக்குப் பரவலாகவும் கடன்தாரர்(கள்) மற்றும் ஜாமீன்தாரர்(கள்) ஆகியோருக்குக் குறிப்பாகவும் அறிவிப்பது யாதெனில், ஈடு பெற்றுக் கடனளித்தவரிடம் அடமானம் / அடகு வைக்கப்பட்டுள்ளதும் ICICI ஹோம் பைனான்ஸ் கம்பெனி லிட்-இன் அதிகாரப்பூர்வ அலுவலரால் நேரடி சுவாதீனம் செய்யப்பட்டுள்ளதுமான கீழே விவரிக்கப்பட்டுள்ள அசையாச் சொத்தானது **"உள்ளது உள்ள இடத்தில்", "உள்ளது உள்ளபடி"** மற்றும் **"உள்ள இடத்தில் உள்ள அனைத்தும்"** எனும் முறையில் விற்பனை செய்யப்பட உள்ளது. இதன் சுருக்கமான விவரங்கள் பின்வருமாறு:

| வ. எண் | கடன்தாரர்(கள்) / கூட்டுக் கடன்தாரர்கள் / ஜாமீன்தாரர்கள் / சட்டப்பூர்வ வாரிசுகள் பெயர் / கடன் கணக்கு எண் | கடனீட்டுச் சொத்துக்களின் விவரங்கள் - தெரிந்த வில்லங்கங்கள் ஏதும் இருப்பின் அவற்றுடன் | நிலுவைத் தொகை | குறைந்தபட்ச விலை / டேவணித் தொகை (EMD) | சொத்தினைப் பார்வையிடும் நாள் மற்றும் நேரம் | ஏல நாள் மற்றும் நேரம் |
|---|---|---|---|---|---|---|
| (A) | (B) | (C) | (D) | (E) | (F) | (G) |
| 1. | S சுந்தரவதனம் (கடன்தாரர்), S ஜானகி (கூட்டுக் கடன்தாரர்) கடன் கணக்கு எண் NHKLK00000825647 | சர்வே எண் 165/17A, பட்டா எண் 179, பகங்காமங்கலம் சாலை, பத்மா நகர், K. மாமனந்தல், தியணைப்பு நிலையம் பின்பக்கம், கள்ளக்குறிச்சி - 606202. | ரூ.30,28,277/- (07.06.2022 நாள்படி) | ரூ. 23,43,750/- / ரூ. 2,34,375/- | 28.06.2022 - முற்பகல் 11.00 மணி முதல் பிற்பகல் 03.00 மணி வரை | 30.06.2022 - பிற்பகல் 02.00 மணி முதல் பிற்பகல் 03.00 மணி வரை |

இணைய ஏலமானது எமது ஏல முகமையான ஆக்ஷன் டைகர் மூலம் இணையத்தளத்தில் **(இணைய முகவரி: https://sarfaesi.auctiontiger.net/EPROC/)** நடத்தப்படும். மொத்த நிலுவையையும் 29.06.2022 **அன்று மாலை 05:00 மணிக்குள்** வட்டியுடன் செலுத்தி விட அடமானதாரருக்கு / அறிவிப்புக்குரியவருக்கு இதன் மூலம் கடைசி வாய்ப்பு வழங்கப்படுகிறது. தவறினால், இந்தக் கடனீட்டுச் சொத்து திட்டமிட்டபடி விற்பனை செய்யப்படும்.

விருப்பமுள்ள ஏலதாரர்கள் தங்களது டேவணித் தொகையை (EMD) RTGS/கேட்பு வரைவோலை (DD) வடிவில் (பார்க்க: பத்தி E) **ICICI ஹோம் பைனான்ஸ் கம்பெனி லிமிடெட், 2ஆவது தளம், சுவர்ணாம்பிகை பிளாசா, ஓமலூர் முதன்மைச் சாலை, சேலம்-636009** எனும் முகவரிக்கு **29.06.2022 அன்று அல்லது அதற்கு முன் பிற்பகல் 04:00 மணிக்குள்** அனுப்ப வேண்டும். ஒருவேளை, விருப்பமுள்ள ஏலதாரர்கள் தங்கள் விலைகோரலை மேற்குறிப்பிட்ட காலக்கெடுவுக்குள் சமர்ப்பிக்க இயலாவிட்டால் கையொப்பமிட்ட விலைப்புள்ளி ஆவணங்களை **2ஆவது தளம், சுவர்ணாம்பிகை பிளாசா, ஓமலூர் முதன்மைச் சாலை, சேலம்-636009 எனும் முகவரியில் உள்ள ICICI ஹோம் பைனான்ஸ் கம்பெனி லிமிடெட்** அலுவலகத்தில் **29.06.2022 அன்று அல்லது அதற்கு முன் மாலை 05:00 மணிக்குள்** சமர்ப்பிக்க வேண்டும் என்பதை நினைவில் கொள்க. டேவணித் தொகை **"ICICI Home Finance Company Ltd.- Auction"** எனும் பெயருக்குக் **கள்ளக்குறிச்சியில்** மாற்றத்தக்க வகையில் நாட்டுடைமையாக்கப்பட்ட / அட்டவணையிடப்பட்ட வங்கியின் கேட்பு வரைவோலை (DD) வடிவில் இருக்க வேண்டும்.

சொத்துக்களைப் பார்வையிடுவது, ஏலம் தொடர்பான விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள், ஒப்பந்தப்புள்ளி சமர்ப்பிப்பது தொடர்பான மேலும் விவரங்களுக்குத் தொடர்பு கொள்க: **ICICI ஹோம் பைனான்ஸ் கம்பெனி லிமிடெட் - 7021072869.**

எந்தக் காரணமும் குறிப்பிடாமல் எந்த ஏலப்புள்ளியையும் அல்லது அனைத்து ஏலப்புள்ளிகளையும் நிராகரிக்க அதிகாரப்பூர்வ அலுவலருக்கு உரிமையுண்டு. விற்பனையின் விரிவான விதிமுறை மற்றும் நிபந்தனைகள் தெரிந்து கொள்ள **https://www.icicihfc.com** இணைப்பைப் பாருங்கள்.

நாள்: 16.06.2022
இடம்: கள்ளக்குறிச்சி

அதிகாரப்பூர்வ அலுவலர்
ICICI ஹோம் பைனான்ஸ் கம்பெனி லிமிடெட்


# புதுவையில் வரைவு வாக்காளர் பட்டியல் வெளியீடு

**புதுச்சேரி, ஜூன் 15:** புதுவையில் உள்ளாட்சித் தேர்தல் ஏற்பாடாக, வரைவு வாக்காளர் பட்டியலை தேர்தல் துறை புதன்கிழமை வெளியிட்டது.

இதுகுறித்து புதுவை மாநிலத் தேர்தல் ஆணையர் ராய் பி.தாமஸ் வெளியிட்ட செய்திக்குறிப்பு: புதுவை மாநிலத் தேர்தல் ஆணையரின் வழிகாட்டுதன்படி, கடந்த 1.1.2022 முதல் 7.1.2022 வரை வரைவு வாக்காளர் பட்டியலானது, புதுச்சேரியின் அனைத்து வாக்காளர் பதிவு அதிகாரிகளின் அலுவலகங்கள், துணை அலுவலகங்களில் பொதுமக்களின் பார்வைக்காக வைக்கப்பட்டிருந்தது. மேலும், வாக்காளர் பெயர் சேர்த்தல், ஆட்சேபனை, நீக்குதல், திருத்துதல், இட மாற்றம் செய்தல் ஆகியன தகுதியுள்ள வாக்காளர்களிடமிருந்து 1.1.2022-ஐ தகுதிபெறும் நாளாக கொண்டு கோரப்பட்டன.

இவ்வாறாக பெறப்பட்ட படிவங்கள் ஆய்வு செய்யப்பட்டு, வாக்காளர் பதிவு அதிகாரிகளால் முடிவு செய்யப்பட்டன. தொடர்ந்து, மாநிலத் தேர்தல் ஆணையத்தால் வெளியிடப்பட்ட வரைவு வாக்காளர் பட்டியல், கடந்த 5.1.2022 அன்று இந்திய தேர்தல் ஆணையத்தால் வெளியிட்டப்பட்ட வாக்காளர் பட்டியலை அடிப்படையாகக் கொண்டு மேம்பாடு செய்யப்பட்டது.

தற்போது வரைவு வாக்காளர் பட்டியலானது புதுவை மாநிலத் தேர்தல் ஆணையத்தின் இணையதளமான https://sec.pv.gov.in/ -ல் பதிவேற்றம் செய்யப்பட்டது. இந்த வாக்காளர் பட்டியலின்படி, புதுச்சேரியில் ஆண்கள் - 3,67,304 பேரும், பெண்கள் 4,11,260 பேரும், மூன்றாம் பாலினத்தவர் - 99 பேரும் என மொத்தம் 7,78,663 வாக்காளர்களும், காரைக்காலில் ஆண்கள் - 74,832, பெண்கள் - 87,049, மூன்றாம் பாலினத்தவர் - 21 என மொத்தம் 1,61,902 வாக்காளர்களும், மாகேவில் ஆண்கள் - 14,386, பெண்கள் - 17,065 என மொத்தம் 31,451 வாக்காளர்களும், ஏனாமில் ஆண்கள் - 18,631, பெண்கள் - 19,946 என மொத்தம் 38,577 வாக்காளர்களும் இடம் பெற்றுள்ளனர்.

ஒட்டுமொத்தமாக புதுச்சேரி யூனியன் பிரதேசத்தில் ஆண்கள் - 4,75,153, பெண்கள் - 5,35,320, மூன்றாம் பாலினத்தவர் - 120 என மொத்தம் 10,10,593 பேர் உள்ளனர். புதுச்சேரி யூனியன் பிரதேசத்தின் அனைத்துப் பகுதிகளிலும் ஆண் வாக்காளர்களை விட, பெண் வாக்காளர்களின் எண்ணிக்கை அதிகமாக உள்ளது.

புதுச்சேரிப் பகுதியில் உள்ள 5 கொம்யூன் பஞ்சாயத்துகளில் வில்லியனூர் கொம்யூன் பஞ்சாயத்தில் அதிகபட்சமாக 1,08,933 வாக்காளர்களும், குறைந்தபட்சமாக நெட்டப்பாக்கம் கொம்யூன் பஞ்சாயத்தில் 41,291 வாக்காளர்களும் இடம்பெற்றுள்ளனர்.

சமீபத்தில் உச்ச நீதிமன்றம், பொது நல வழக்கில் வழங்கிய தீர்ப்பில், அனைத்து மாநிலத் தேர்தல் ஆணையங்களுக்கும் உள்ளாட்சித் தேர்தலை நடத்த அறிவுறுத்தியுள்ளது. இந்தத் தீர்ப்பானது புதுச்சேரி மாநிலத் தேர்தல் ஆணையத்தின் இணையதளத்தில் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளது. இந்தத் தகவல், மாநில மக்களுக்கும், அனைத்து அரசியல் கட்சிகளுக்கும் இதன்மூலம் அறிவிக்கப்படுகிறது என அதில் கூறப்பட்டுள்ளது.


HDFC BANK
We understand your world

**Regd. Office:** HDFC Bank House, Senapati Bapat Marg, Lower Parel (West), Mumbai-400 013.
**கிளை அலுவலகம்:** தரை 1,2 & 3வது தளம், பழைய எண்.49/50, நெல்சன் மாணிக்கம் ரோடு, அமிஞ்சிக்கரை, சென்னை - 600 029

**கோரிக்கை அறிவிப்பு**

**2002-ம் ஆண்டு கடனீட்டுச் சொத்துகளை ரொக்கமாக்குதல், நிதிச்சொத்துகளைச் சீரமைத்தல் மற்றும் கடனீட்டுச் சொத்துகள் மீதான உரிமை அமலாக்கச் சட்டம் (SARFAESI சட்டம் 2002) பிரிவு 13(2) மற்றும் அதற்குத் தொடர்புடைய 2002-ம் ஆண்டு கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்க விதிகள் 3(1)-ன் கீழ்.**

கீழே கையொப்பமிட்டுள்ளவர், 2002-ம் ஆண்டு கடனீட்டுச் சொத்துகளை ரொக்கமாக்குதல், நிதிச்சொத்துகளைச் சீரமைத்தல் மற்றும் கடனீட்டுச் சொத்துகள் மீதான உரிமை அமலாக்கச் சட்டத்தின்படி (சட்டம்) HDFC பேங்க் லிட்-ன் அதிகாரபூர்வ அலுவலராக இருக்கிறார். மேற்படி சட்டம் பிரிவு 13(12) மற்றும், அதற்குத் தொடர்புடைய 2002-ம் ஆண்டு கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்க விதிகள் 3-ன் கீழும், தமக்குள்ள அதிகாரத்தைப் பயன்படுத்தி, மேற்படி சட்டம் 13(2)-ன் கீழ் கோரிக்கை அறிவிப்பினை (Demand Notice) பின்வரும் கடன்தாரர்களுக்கு (கடன்தாரர்கள்) **13.05.2022** அன்று பதிவு அஞ்சலில் அனுப்பி அந்தக் கோரிக்கை அறிவிப்பில் காணும் தொகையை செலுத்துமாறு கோரியிருந்தார். அது தொடர்பாக மீண்டும் இப்போது இதன் மூலம் கடன்தாரர்களுக்கு அறிவிப்பது என்னவென்றால் இந்த அறிவிப்பு வெளியிடப்பட்ட 60 நாட்களுக்குள் கோரிக்கை அறிவிப்பில் விவரிக்கப்பட்டுள்ள தொகை மற்றும் கடன்தாரர்களால் கையொப்பமிட்டு வழங்கப்பட்ட கடன் ஒப்பந்தம் மற்றும் அது சம்பந்தப்பட்ட இதர ஆவணங்கள் மற்றும் எழுத்து வரிகள் படி அந்தக் கோரிக்கை அறிவிப்பு தேதியிலிருந்து, அத் தொகை செலுத்தப்படும் மற்றும் வசூலிக்கப்படும் தேதி வரையான வட்டி செலவுகள் எதிர்பாரா செலவுகள் கட்டணங்கள் முதலானவற்றைச் சேர்த்துச் செலுத்துமாறு கோரப்படுகிறது. கடன் திருப்பிச் செலுத்தப்படுவதை உறுதிப் படுத்தும் வகையில் கடனுக்கு ஈடாக பின்வரும் சொத்துகள் கடன்தாரர்களால் HDFC வங்கி லிட் வசம் அடமானம் வைக்கப்பட்டுள்ளன.

| கடன்தாரர் / ஜாமீன்தாரர் பெயர் & முகவரி | கோரிக்கை அறிவிப்பு தேதி & தொகை மற்றும் NPA தேதி | சொத்துக்கள் விவரம் - நான்கு எல்லைகளுடன் |
|---|---|---|
| **1.M/s.கோகுலம் இண்டஸ்ட்ரீஸ்,** எண்.41/B, திருப்பூர் குமரன் தெரு, புழல், சென்னை-600066. **2.Mr.ரகோதமன் கோவிந்தசாமி, 3.Mrs.பத்மாவதி ரகோதமன்,** இருவரது முகவரி: எண்.42/16 B, சோமேஸ்வரன் கோயில் தெரு, பண்ருட்டி, கடலூர் மாவட்டம், தமிழ்நாடு-607106. **4.Mr.சரவணன் ரகோதமன், 5.Mr.ஹரிஹரன் ரகோதமன்,** இருவரது முகவரி: எண்.41, திருப்பூர் குமரன் மெயின் தெரு, புழல், திருவள்ளூர் மாவட்டம், சென்னை-600066. **6.Mrs.சாரதா ஹரிஹரன்,** எண்.42/16 B, சோமேஸ்வரன் கோயில் தெரு, பண்ருட்டி, கடலூர் மாவட்டம், தமிழ்நாடு-607106. **7.Mrs.R.நாகேஸ்வரி சரவணன்,** எண்.41, திருப்பூர் குமரன் தெரு, முருகன் கோயில், புழல், திருவள்ளூர் மாவட்டம், சென்னை-600066. கடன் கணக்கு எண்: **8185290** கடன் வசதி: **LAP-MORTGAGE-GECL** | **கோரிக்கை அறிவிப்பு தேதி: 13.05.2022;** **கடன் நிலுவைத்தொகை 13.05.2022 அன்றுள்ளபடி ரூ.1,47,55,650/-** மற்றும் அறிவிப்பு தேதியிலிருந்து கடன் தொகை முழுவதையும் திருப்ப செலுத்தும் காலம் வரை எதிர்கால வட்டி, அபராத வட்டி, இதர செலவுகள். **NPA தேதி : 07.04.2022** | **ஐட்டம் எண்.1:** சர்வே எண்.306/42, புழல் கிராமம், திருப்பூர் குமரன் தெரு, புழல், மாதவரம் தாலுகா, திருவள்ளூர் மாவட்டம் என்னும் முகவரியில் 4865 சதுர அடி நிலம் மற்றும் அதனுடன் இணைந்த துண்டுகளும் பகுதிகளும். எல்லைகள்: வடக்கு: ஸ்ரீனிவாசன் சொத்து, தெற்கு: ரகோதம்மன் சொத்து, கிழக்கு: திருப்பூர் குமரன் தெரு, மேற்கு: நமசிவாயம் சொத்து. **ஐட்டம் எண்.2:** சர்வே எண்.306/42, புழல் கிராமம், திருப்பூர் குமரன் தெரு, புழல், மாதவரம் தாலுகா, திருவள்ளூர் மாவட்டம் என்னும் முகவரியில் 9720 சதுர அடி நிலம் மற்றும் அதனுடன் இணைந்த துண்டுகளும் பகுதிகளும். எல்லைகள்: வடக்கு: நடராஜன் சொத்து, தெற்கு: துர்கா ராணி மற்றும் மற்றவர்கள் சொத்து மற்றும் ரகோதம்மன் சொத்து, கிழக்கு: திருப்பூர் குமரன் தெரு மற்றும் ரகோதம்மன் சொத்து, மேற்கு: எழில் நர்சரி பள்ளி. **ஐட்டம் எண்.3:** சர்வே எண்.306/42, புழல் கிராமம், திருப்பூர் குமரன் தெரு, புழல், மாதவரம் தாலுகா, திருவள்ளூர் மாவட்டம் என்னும் முகவரியில் 4104 சதுர அடி நிலம் மற்றும் அதனுடன் இணைந்த துண்டுகளும் பகுதிகளும். எல்லைகள்: வடக்கு: ரகோதம்மன் சொத்து, தெற்கு: ரகோதம்மன் சொத்து, கிழக்கு: திருப்பூர் குமரன் தெரு, மேற்கு: ரகோதம்மன் சொத்து. **ஐட்டம் எண்.4:** சர்வே எண்.306/42, புழல் கிராமம், திருப்பூர் குமரன் தெரு, புழல், மாதவரம் தாலுகா, திருவள்ளூர் மாவட்டம் என்னும் முகவரியில் 872 சதுர அடி நிலம் மற்றும் அதனுடன் இணைந்த துண்டுகளும் பகுதிகளும். எல்லைகள்: வடக்கு: ரகோதம்மன் சொத்து, தெற்கு: எழில் நர்சரி பள்ளி கிழக்கு: ரகோதம்மன் சொத்து, மேற்கு: ஆனந்தம் சொத்து / எழில் நர்சரி பள்ளி. **ஐட்டம் எண்.5:** சர்வே எண்.306/42, புழல் கிராமம், மனை எண்.4&5, லக்ஷ்மி கோயில் தெரு, புழல், மாதவரம் தாலுகா, திருவள்ளூர் மாவட்டம் என்னும் முகவரியில் 3286 சதுர அடி (அதாவது 1860 + 1426 சதுர அடி) நிலம் மற்றும் அதனுடன் இணைந்த துண்டுகளும் பகுதிகளும். எல்லைகள்: வடக்கு: ரகோதம்மன் சொத்து, தெற்கு: செயின்ட் ஜார்ஜ் மில்டன் நர்சரி பள்ளி, கிழக்கு: ரகோதம்மன் சொத்து, மேற்கு: மனை எண்.2 & 3, தற்போது ரகோதம்மன்-க்கு சொந்தமானது. **ஐட்டம் எண்.6:** சர்வே எண்.306/42, புழல் கிராமம், திருப்பூர் குமரன் தெரு, புழல், மாதவரம் தாலுகா, திருவள்ளூர் மாவட்டம் என்னும் முகவரியில் 2340 சதுர அடி நிலம் மற்றும் அதனுடன் இணைந்த துண்டுகளும் பகுதிகளும். எல்லைகள்: வடக்கு: ரகோதம்மன் சொத்து, தெற்கு: செயின்ட் ஜார்ஜ் மில்டன் நர்சரி பள்ளி, கிழக்கு: ரகோதம்மன் சொத்து, மேற்கு: மனை எண்.4 & 5, தற்போது ரகோதம்மன்-க்கு சொந்தமானது. **ஐட்டம் எண்.7:** சர்வே எண்.306/42, புழல் கிராமம், திருப்பூர் குமரன் தெரு, புழல், மாதவரம் தாலுகா, திருவள்ளூர் மாவட்டம் என்னும் முகவரியில் 5028 சதுர அடி நிலம் மற்றும் அதனுடன் இணைந்த துண்டுகளும் பகுதிகளும். எல்லைகள்: வடக்கு: ரகோதம்மன் சொத்து, தெற்கு: நாகம்மாள் சொத்து, கிழக்கு: திருப்பூர் குமரன் தெரு, மேற்கு: ரகோதம்மன் சொத்து. சொத்தானது தென் சென்னை பதிவு மாவட்டம், செங்குன்றம் சார் பதிவு மாவட்டம் எல்லைக்குட்பட்டது. |

மேற்குறித்தவாறு HDFC பேங்க் லிட்-க்கு கடன் பாக்கித் தொகையை மேற்படி கடன்தாரர்கள் செலுத்தத் தவறினால் மேற்படி சட்டம் பிரிவு 13(4) மற்றும் பொருந்துகின்ற விதிகளின் படி மேற்படி கடனுக்கு ஈடான சொத்து மீது கடன்தாரர்களின் முழுமையான சொந்த கஷ்ட நஷ்டத்தின் பேரிலும், விளைவுகள் பேரிலும், மேற்படி கடனுக்கு ஈடான சொத்துகள் மீது HDFC பேங்க் லிட் நடவடிக்கைகள் எடுக்கும். HDFC பேங்க் லிட்-ன் எழுத்துபூர்வமான முன் ஒப்புதல் இல்லாமல் மேற்படி கடனுக்கு ஈடான சொத்தினை விற்பனை, குத்தகை அல்லது இதர வகையில் பரிமாற்றம், உரிமை மாற்றம் செய்வதற்கோ, வில்லங்கம் படுத்துவதற்கோ மேற்படி சட்டம் பிரிவு 13(13) -ன் கீழ் மேற்படி கடன்தாரர்கள் தடை செய்யப்படுகிறார்கள். இதற்கு மாறாகச் செயல்படும் அல்லது செயல்படுவதற்குத் துணை புரியும் எந்தவொரு நபரும் மேற்படி சட்டம் மற்றும் விதிகளின் கீழ் சிறை தண்டனை விதிக்கப்படுவார் மற்றும் அல்லது மேற்படி சட்டத்தின் கீழ் அபராதம் விதிக்கப்படுவார். இதன் பின்னர் வேறு எந்தவொரு அறிவிப்பும் அளிக்கப்பட மாட்டாது என்பதையும் கவனத்தில் கொள்ளவும்.

தேதி : 13.05.2022
இடம்: சென்னை

ஒப்பம்/- அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி
HDFC பேங்க் லிமிடெட்


# செஞ்சியில் ஜமாபந்தி நிறைவு விழாவில் ரூ.1.31 கோடியில் நலத் திட்ட உதவிகள்

அமைச்சர் வழங்கினார்

**செஞ்சி, ஜூன் 15:** விழுப்புரம் மாவட்டம், செஞ்சி வட்டாட்சியர் அலுவலகத்தில் புதன்கிழமை நடைபெற்ற ஜமாபந்தி நிறைவு விழாவில் பயனாளிகளுக்கு ரூ.1.31 கோடியிலான நலத் திட்ட உதவிகளை மாநில சிறுபான்மையினர் நலன், வெளிநாடு வாழ் தமிழர் நலத் துறை அமைச்சர் செஞ்சிமஸ்தான் வழங்கினார்.

செஞ்சி வட்டாட்சியர் அலுவலகத்தில் 1431-ஆம் பசலி ஆண்டுக்கான ஜமாபந்தி நிறைவு விழா வருவாய்த் தீர்வாய அலுவலரான சார் ஆட்சியர் அமீத் தலைமையில் நடைபெற்றது.

இதில், செஞ்சி வட்டாட்சியர் ஜி.பழனி வரவேற்றார்.

விழாவில் கலந்துகொண்ட அமைச்சர் செஞ்சி மஸ்தான், தமிழக அரசின் பல்வேறு நலத் திட்ட உதவிகள் குறித்தும், அதை பெறுவது குறித்தும் சிறப்புரையாற்றி, 71 பயனாளிகளுக்கு முழு பட்டா மாற்றம், 14 பேருக்கு உள்பிரிவு பட்டா மாற்றம், 100 பயனாளிகளுக்கு முதியோர் உதவித்தொகை, 43 பேருக்கு மின்னணு குடும்ப அட்டை, 20 பேருக்கு பழங்குடி நல வாரிய அட்டை, 45 பேருக்கு பிரதமரின் தொகுப்பு வீடுகள் உள்பட மொத்தம் 302 பயனாளிகளுக்கு ரூ.1.31 கோடியிலான நலத் திட்ட உதவிகளை வழங்கினார்.



செஞ்சி வட்டாட்சியர் அலுவலகத்தில் நடைபெற்ற ஜமாபந்தி நிறைவு விழாவில் பயனாளிக்கு நலத் திட்ட உதவியை வழங்கிய அமைச்சர் செஞ்சி மஸ்தான்.

விழாவில் செஞ்சி ஊராட்சி ஒன்றியக் குழுத் தலைவர் ஆர்.விஜயகுமார், துயர் துடைப்பு வட்டாட்சியர் நெகருன்னிசா, மண்டல துணை வட்டாட்சியர் வெங்கடேசன், வருவாய் ஆய்வாளர்கள் கண்ணன், பரமசிவம், கீதா, கார்த்திகேயன் உள்ளிட்ட அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.


CLASSIFIEDS

CHANGE OF NAME

I, PONNALAGARAM RAMASAMY CHAKKARAVARTHI, S/o. Ramasamy, residing at Door No.3/38, North Street, Ponnalagaram, Vriddhachalam Taluk, Cuddalore District, Tamil Nadu, shall henceforth be known and called as P.R.CHAKKARAVARTHI.

- PONNALAGARAM RAMASAMY CHAKKARAVARTHI

பெயர் மாற்றம்

புதுச்சேரி -605005, எல்லைபிள்ளைச்சாவடி, கணபதி நகர், முதல் குறுக்கு தெரு, பிளாட் எண் 2 & 3 என்ற முகவரியில் வசிக்கும் MONCHER LUCIEN (D.O.B 22/03/2001) S/o djegaradj moncher என்கிற எனது பெயரை DJEGARADJ MONCHER LUCIEN என்று பெயர் மாற்றம் செய்து கொள்கிறேன் என்று இதன் மூலம் தெரிவித்துக் கொள்கிறேன்.

-MONCHER LUCIEN